## 1.1 அபிப்பிராயம்

ஸ்ரீ லங்கன் எயார்லைன்ஸ் லிமிட்டட்டினதும் (கம்பனி) மற்றும் கம்பனி மற்றும் அதன் துணைக் கம்பனியினதும் (தொகுதி) 2020 மார்ச் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த விரிவான வருமானக் கூற்று, உரிமை மாற்றல்க் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் முக்கிய கணக்கீட்டுக் கொள்கைகளினதும் ஏனைய விளக்கத் தகவல்களினதும் பொழிப்புக்களை உள்ளடக்கிய 2020 மார்ச் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் மற்றும் ஒருங்கிணைந்த நிதிக்கூற்றுக்கள் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலைமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்குச் சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதுகின்ற எனது கருத்துரைகளும் அவதானிப்புக்களும் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன. இந்தக் கணக்காய்வினை மேற்கொள்வதற்கு பட்டயக்கணக்காய்வாளர் நிறுவனத்தின் உதவியைப் பெற்றுக்கொண்டேன்.

கம்பனியின் 2020 மார்ச் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் இலங்கை கணக்கீட்டுக் நியமங்களிற்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### விடயத்தினைச் சுட்டிக்காட்டல்

#### (அ) தொடர்ந்து செல்லும் எண்ணக்கரு தொடர்பான பொருண்மையான நிச்சயமற்றதன்மை

2020 மார்ச் 31 இல் முடிவடைந்த ஆண்டின்போது ஏற்பட்ட ரூபா 47,197.86 மில்லியன் தேறிய நட்டத்துடன் ரூபா 326,341.48 மில்லியன் திரணட நட்டத்தை கம்பனி ஏற்படுத்தியிருந்தது. அத்திகதியில், கம்பனியின் நடைமுறைப்பொறுப்புக்களானது அதனுடைய நடைமுறைச் சொத்துக்களை ரூபா 211,645.13 மில்லியனால் விஞ்சியிருந்ததுடன் மொத்தப் பொறுப்புக்களானது மொத்தச் சொத்துக்களை ரூபா 273,369.08 மில்லியனால் விஞ்சியிருந்தது. மேலும், குழுவானது ரூபா 316,477.65 மில்லியன் திரண்ட நட்டத்துடன் 2020 மார்ச் 31 இல் முடிவடைந்த ஆண்டின் போது ரூபா 44,139.40 மில்லியன் தேறிய நட்டத்தை ஏற்படுத்தியிருந்ததுடன் அத்திகதியிலுள்ளவாறு குழுவின் நடைமுறைப்பொறுப்புக்களானது அதன் நடைமுறைச்சொத்துக்களை ரூபா 200,878.32 மில்லியனால விஞ்சியிருந்ததுடன் மொத்தப்பொறுப்புக்களானது அதனுடைய மொத்தச் சொத்துக்களை ரூபா 261,173.54 மில்லியனால் விஞ்சியிருந்தது குறிப்பு இலக்கம் 03 இல் வெளிக்காட்டி கவனஞ்செலுத்தப்பட்டது.

குறிப்பு 03 இல் குறிப்பிட்டவாறு, இந்த நிகழ்வுகள் மற்றும் நிபந்தனைகள் குறிப்பு 03 இல் நான்காம் பந்தியில் காட்டப்பட்ட ஏனைய விடயங்களுடன் சேர்த்து தொடர்ந்து செல்லும் எண்ணக்கருவாக தொடருவதற்கு குழுவின் / கம்பனியின் இயலுமை மீது பொருண்மையான நிச்சயமற்றதன்மையானது முக்கிய சந்தேகத்தை ஏற்படுத்தக்கூடும்.

நாட்டில் பரவிய கொவிட் - 19 இனை தொடர்ந்து அரசாங்கமானது போக்குவரத்து தடைகளை விதித்தமையால் கடன் மற்றும் திரவ இடர்களை தீர்ப்பதில் தாமதங்கள் ஏற்பட்டமையால் குழுவின்/ கம்பனியின் வருமானத்தில் நட்டமொன்றை குழு/ கம்பனியானது எதிர்கொள்கின்றது.

நிதிக்கூற்றுக்களின் 2.1 ஆம் குறிப்பானது கொவிட் -19 இன் விளைவானது எவ்வாறு குழுவின்/ கம்பனியின் எதிர்கால நிலைமைகள், செயலாற்றல்கள் மற்றும் காசுப்பாய்ச்சல் விளைவினை ஏற்படுத்துமென விபரிக்கின்றது. முகாமைத்துவமானது நிதிக்கூற்றுக்களை

முடிவுறுத்தும் நேரத்தில் இந்த தீவிர நோய் பரவுவதால் இந்த நிகழ்வுகள் மற்றும் சூழ்நிலைகளை எவ்வாறு கையாளுவதற்கு திட்டமிட்டார்கள் என விபரித்தனர்.

2020 யூன் 17 இன் அமைச்சரவை அனுமதி மற்றும் 2020 மார்ச் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நியதி கணக்காய்வு நோக்கத்திற்காக பெறப்பட்ட 2020 யூன் 29 இல் உள்ளவாறான திறைரேியின் செயலாளரால் வழங்கப்பட்ட கடிதத்துடன் இணைந்து குறிப்பு 03 இல் வெளிக்காட்டப்பட்டவாறு குறைக்கும் காரணிகளை கவனத்தில் எடுக்கையில் கம்பனியானது தொடர்ந்து செல்லும் எண்ணக்கருவாக செயற்பவதற்காக இலங்கை அரசாங்கத்தின் ஆதரவை உறுதிப்படுத்தி தொடர்ந்து செல்லும் எண்ணக்கரு எடுகோளை பயன்படுத்தி இந்த நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கப்பட்டிருந்தது.

(ஆ) **ஏ 350 – 900 ஏயார்கிறாப்ட் இன் முன் விநியோக கொடுப்பனவு –**

ஏயார்வஸ் ஏ 350 – 900 ஏயார்கிறாப்ட் இனை 2020 மற்றும் 2021 இல் விநியோகிப்பதற்கு ரூபா 2,528.12 மில்லியன் (யூஎஸ்டி 19.21 மில்லியன் தொகை) முன் விநியோக கொடுப்பனவுகளை உள்ளடக்கி 2020 மார்ச் 31 இல் உள்ளவாறான முன் விநியோக கொடுப்பனவுகளையும் 2020 மார்ச் 31 இல் உள்ளவாறு ஏயார்வஸ்க்கு செலுத்தப்பட்ட யூஎஸ்டி 207.89 மில்லியன் தொகையான முன் விநியோக கொடுப்பனவு உள்ளது எனவும் குறிப்பிட்டு குறிப்பு இலக்கம் 06 இல் கவனஞ்செலுத்தப்படுகின்றது.

குறிப்பு இலக்கம் 06 இல் குறிப்பிட்டவாறு கம்பனியானது உடன்படிக்கையினை மீள்சமரசஞ்செய்வதற்காக ஏயார்வஸ் உடன் கலந்துரையாடலில் இருந்தமையால் சபையானது மீள்சமரசஞ்செய்ததிலிருந்து உருவாகின்ற முன்விநியோக கொடுப்பனவுகள் அல்லது தண்டப்பணங்களின் எந்தவொரு நட்டத்தையும் சபையானது எதிர்கொள்ளவில்லை. எனினும், எந்தவொரு தீர்மானமும் 2020 யூலை 30 வரையிலும் எடுக்கப்பட்டிருக்கவில்லை.

எனது அபிப்பிரயமானது இந்ந விடயங்களின் அடிப்படையில் மாற்றஞ்செய்யப்படுகின்றது.

## 1.2 அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (எஸ்எல்ஏயூஎஸ்எஸ்) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். அந்நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் எனது அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

## 1.3 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தினதும் அவ் ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்

இந்நிதிக்கூற்றுக்களை இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கும் போது, குழுவின் தொடர்ந்தியங்கும் இயலுமையை தீர்மானித்தல் முகாமைத்துவத்தின் பொறுப்பொன்றாக இருப்பதுடன் முகாமைத்துவமானது கம்பனியினைக் கலைப்பதற்கு கருதினால் அல்லது வேறு மாற்று வழி இல்லாவிட்டால் செயற்பாடுகளினை இடைநிறுத்த நடவடிக்கை எடுத்தால் தவிர தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு அடிப்படையினை பயன்படுத்துதல் மற்றும் கம்பனியின் தொடர்ந்தியங்குவதற்கு உரிய விடயங்களை வெளிப்படுத்துவதும் முகாமைத்துவத்தின் பொறுப்பொன்றாகும்.

கம்பனி மற்றும் குழுவின் நிதி அறிக்கையிடல் செயன்முறை தொடர்பான பொறுப்பு, அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களினால் ஏற்கப்படும்.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் 16(1) ஆம் பிரிவின் பிரகாரம், கம்பனி மற்றும் குழுவின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடியவாறு கம்பனி அதன் அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பான புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் வேண்டும்.

**1.4 கணக்காய்வின் நோக்கெல்லை**

ஒட்டு மொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றைப் பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்களின் இல்லாமை என்பதன் உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடி அல்லது தவறுகள் தனியாகவோ கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்க கூடியதாக இருப்பதுடன் இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் பொருளதார தீர்மானங்கள் எடுக்கும் போது அது தொடர்பாக கருத்தில் கொள்ளப்படல் வேண்டும்.

துறைசார் வெளிப்படை மற்றும் தொழில்துறை பின்னணியுடன் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் என்னால் கணக்காய்வு செய்யப்பட்டன. மேலும்,

- மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் இனங்காணும் போதும் மதிப்பீட்டின் போது சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடுவதன் மூலம் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய ஆபத்துகளை தவிர்த்துக் கொள்வதற்கும் போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்ளல் எனது அபிப்பிராயத்திற்கு அடிப்படையாகும். பொருண்மையான பிறழ் கூற்றினால் எழும் தாக்கங்களினை விட மோசடிகளால் இடம்பெறும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன் தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடியொன்று ஏற்படுவதற்கு காரணமாகின்றது.

- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக கணக்காய்வுடன் தொடர்புடைய உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி கம்பனியின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.

- முகாமைத்துவத்தால் பின்பற்றப்பட்ட கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் பயன்படுத்திய கணக்கீட்டு மதிப்பீடுகள் மற்றும் தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் நியாயமாகவும் மதிப்பீடு செய்தல்.

- நிகழ்வுகள் அல்லது நிலைமைகள் காரணமாக கம்பனியின் தொடர்ந்து இயங்குவது தொடர்பாக போதியளவில் நிச்சயமற்ற நிலைமையொன்று இருக்கின்றதா என்பது தொடர்பாக பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகளை அடிப்படையாகக் கொண்டு கணக்கீட்டிற்காக தொகுதியின் தொடர்ந்தியங்குவது தொடர்பாக அடிப்படையின் பயன்பாட்டின் பொருத்தப்பாட்டினை தீர்மானிக்கின்றது. பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றது என நான் முடிவுக்குவந்தால், நிதிக்கூற்றுக்களில் அது தொடர்பாக வெளிப்படுத்துவதற்கு எனது கணக்காய்வு அறிக்கையின் மீது கவனம் செலுத்துதல் வேண்டியதுடன் அவ்வெளிப்படுத்தல்கள் பொருண்மையாக இல்லாதிருந்தால்

எனது அபிப்பிராயத்தை வெளிப்படுத்த வேண்டும். எவ்வாறாயினும், எதிர்கால நிகழ்வுகள் அல்லது நிலைமைகள் தொகுதியின் தொடர்ந்தியங்கும் நிலைமையை முடிவுறுத்த நேரலாம்.

- வெளிப்படுத்தல்கள் அடங்கலாக நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல், கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கங்களை மதிப்பீடு செய்தல் மற்றும் நியாயமான சமர்ப்பித்தலினை நிறைவேற்றுவதற்கு அடிப்படையாகக் காணப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் நிகழ்வுகளை நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளதா என்பதனை மதிப்பீடு செய்தல்.

- ஒட்டுமொத்த நிதிக்கூற்றுக்கள் மீது அபிப்பிராயத்தை வெளிப்படுத்துவதற்கு குழுவினுள்ள நிறுவனங்கள் அல்லது வணிக நடவடிக்கைகள் தொடர்பில் போதிய மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றினை பெறுதல். நாங்கள் எங்களுடைய கணக்காய்வு அபிப்பிராயத்திற்கு தனியாக பொறுப்பாகவுள்ளோம்.

இயலுமான வரையிலும் தேவையான எந்தவொரு சந்தர்ப்பத்திலும் பின்வருவனவற்றை பரீட்சிப்பதற்காக விடயப்பரப்பு விரிவுபடுத்தப்பட்டுள்ளது.

- தகவல்கள் சமர்ப்பித்தல் தொடர்பாக பார்க்கும் போது கம்பனியின் செயற்பாடுகள் தொடர்ச்சியாக மதிப்பீடு செய்யப்படக்கூடிய வகையில் அதன் ஒழுங்கமைப்பு, முறைமைகள், வழிகாட்டிக் கோவை, பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதியளவிலும் திட்டமிடப்பட்டுள்ளதா எனவும் அதன் முறைமைகள், வழிகாட்டிக் கோவை, பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமாக பேணிச்செல்லப்படுகின்றதா எனவும்,

- கம்பனி ஏதேனும் உரிய எழுத்துமூல சட்டத்திற்கோ அல்லது கம்பனியின் நிர்வாக சபையினால் வழங்கப்பட்ட பொது அல்லது விசேட ஏற்பாடுகளுக்கு இணங்க கம்பனி செயற்படுகின்றதா எனவும்,

- கம்பனி தனது அதிகாரங்கள், இலக்குகள் மற்றும் பணிகளுக்கு இணங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும்,

- கம்பனியின் வளங்கள் சிக்கனமாக, செயற்திறனாகவும் ஆக்கபூர்வமாகவும் காலஎல்லைக்குள் மற்றும் உரிய சட்ட விதிகளுக்கு இணங்க பெறுகை செய்யப்பட்டுள்ளதாகவும்.

## 1.5 நிதிக்கூற்றுக்கள்

### 1.5.1 நிதிக்கூற்றுக்களை தயாரிப்பது தொடர்பான உள்ளகக் கட்டுப்பாடு

முகாமைத்துவத்தின் பொது மற்றும் குறித்துரைக்கப்பட்ட அதிகாரத்துடன் செயற்படுத்துதல் உரிய அறிக்கையிடல் நியமங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்களை தயாரிப்பதற்கு தேவையான வகையில் கொடுக்கல் வாங்கல்களை பதிவுசெய்தல் மற்றும் சொத்துக்களுக்காக கணக்களிதன்மையை பேணிச் செல்லல், முகாமைத்துவத்தினால் பொது மற்றும் திட்டவட்டமான அதிகாரத்துடன் கூடிய சொத்துக்ளுக்கு மாத்திரம் சொத்துக்களை அணுகுதல், பதிவுசெய்யப்பட்ட சொத்துக்களுக்கான கணக்களிதன்மை காணப்படும் சொத்துக்களுடன் நியாயமான காலப்பகுதியில் சீராக்கம் மற்றும் வேறுபாடுகள் காணப்பட்டால் அதுதொடர்பாக உரிய நடவடிக்கைகளை எடுத்தல் போன்றவற்றுக்கான நியாயமான உறுதிப்படுத்தலொன்றை பெற்றுக் கொள்வதற்கு போதியளவு ‘‘முறையாக திட்டமிடப்பட்ட’’ உள்ளக கணக்கீட்டு கட்டுப்பாட்டு முறைமையொன்றை நிறுவனம் பராமரித்துக்கொள்வது அவசியமாகவுள்ளது.

### 1.5.2 இணக்கஞ்செய்யப்படாத கட்டுப்பாட்டு கணக்குகள் அல்லது பதிவுகள்

| கணக்காய்வு விடயம் | முகாமைத்துவ கருத்துரை | பரிந்துரை |
| --- | --- | --- |
| எல்கேஎஎஸ் - 21 வெளிநாட்டு நாணயமாற்று விகிதங்களில் மாற்றங்களின் தாக்கத்தின் பிரகாரம், வெளிநாட்டு நாணயத்தில் கொள்வனவு செய்யப்பட்ட பணரீதியற்ற சொத்துக்கள் கொடுக்கல் வாங்கல் திகதியில் நிலவுகின்ற விகிதத்தில் அறிக்கையிடல் நாணயத்திற்கு மாற்றப்பட வேண்டியதுடன் அதன்பின்னர் வரலாற்று விகிதத்தில் பேணப்படல் வேண்டும். எவ்வாறாயினும், இடர் மற்றும் வெகுமதிகள் (GRN திகதி) மாற்றப்பட்ட திகதிக்குப் பதிலாக பிஓ (PO) திகதியில் காணப்பட்ட நாணயமாற்று விகிதத்தின் அடிப்படையில் இருப்புக்களினை அவுர முறைமை தானாகவே பெறுமதியிடுகின்றது. ஆகையினால், பொதுப்பேரேடு மற்றும் இருப்பு முறைமை( அவுர ) இற்கிடையே ரூபா 87,724,205 வித்தியாசமொன்று அவதானிக்கப்பட்டது. மேலும், இணக்கச்செய்முறை முன்னேற்றமடைந்திருந்தது என கம்பனி குறிப்பிட்டிருந்தது. எனினும், முறைமை இதுவரை அமுல்படுத்தப்பட்டிருக்கவில்லை. | பொறியியல் ஈஆர்பி பதிலீடு செய்யப்பட்டிருக்காமையினால், அமுல்படுத்துவதற்கு இது சாத்தியமற்றதாக் காணப்படுகின்றது. 2022 செப்தெம்பர் இல் பூர்த்திசெய்யப்பட்டிருக்க வேண்டுமென திட்டமிடப்பட்ட ஈஆர்பீ செய்முறையானது கம்பனியின் நிதிப்பற்றாக்குறையால் இடைநிறுத்தப்பட்டிருந்தது. தற்போது புதியதொரு ஆர்எவ்பீ மதிப்பிடப்பட்டுக்கொண்டிருக்கின்றது. இடைக்கால தீர்வாக புதிய வித்தியாசங்களை கண்டுபிடிப்பதற்கும் திருத்துவதற்கும இணக்கச்செய்முறை முன்னேற்றப்பட்டிருந்தது. ஆகையால், 2019 மார்ச் இலிருந்து வித்தியாசத்தில் எந்தமாற்றமுமில்லை. | இருப்பு விலைமதிப்பிற்காக ஜீஆர்என் திகதியினைப் பயன்படுத்துவதற்கு அவுற முறைமை அபிவிருத்தி செய்யப்படல் வேண்டும். மேலும், குறித்த நாணயமாற்று விகித தாக்கத்தினை தொடர்ச்சியாக அறிவிட மற்றும் வித்தியாசத்தின் நகர்வினை இணக்கஞ் செய்வதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்படல் வேண்டும். |

### 1.5.3 அனுமதியளிக்கப்படாத கொடுக்கல் வாங்கல்கள்

| அனுமதியளிக்கப்படாத கொடுக்கல் வாங்கல்களின் விபரம் | முகாமைத்துவ கருத்துரை | பரிந்துரை |
| --- | --- | --- |
| ஆறு (06) ஏ330-300 விமானங்கள் மற்றும் நான்கு (04) ஏ350-900 விமானங்களினைக் கொள்வனவு செய்தல், மற்றுமொரு நான்கு (04) ஏ350-900 விமானங்களினை குத்தகைக்கு எடுத்தல் மற்றும் மேற்குறித்த ஆறு (06) ஏ330-300 விமானங்களினை விற்பனை செய்வதுடன் குத்தகைக்கு மீள எடுத்தலுக்கான தீர்மானம் முறையானதொரு கிரய நலன்கள் பகுப்பாய்வினை மேற்கொண்டிராது மற்றும் அமைச்சரவையின் அங்கீகாரத்தினைப் | இது தற்போதைய நிதியாண்டுடன் தொடர்புடையதாகக் காணப்படாததுடன் 2013 இல் பணிப்பாளர் சபையின் அங்கீகாரத்துடன் 2013 இல் மேற்கொள்ளப்பட்டது.<br><br>தீவிர தவறு அலுவலகம் மற்றும் ஏயார்பஸ் எஸ்ஈ இற்குமிடையில் தனிப்பட்ட வழக்கு உடன்படிக்கையினை அங்கீகரித்து ஐக்கிய இராச்சியத்திலுள்ள கிரவுன் நீதிமன்றத்தின் தீர்ப்பில் | அவ்வாறான பாரிய முதலீடுகளினை மேற்கொள்வதற்கு முன்னர் விபரமான மற்றும் யாதார்த்தமான கிரய நலன் பகுப்பாய்வு மேற்கொள்ளப்பட வேண்டியதுடன் அமைச்சரவையின் அங்கீகாரம் பெறப்படல் வேண்டும்.<br>வினைத்திறனான மற்றும் செயற்திறனான வகையில் பாதை |

| | | |
|---|---|---|
| பெற்றுக்கொள்ளாது 2013 இல் கம்பனியின் பணிப்பாளர் சபையினால் எடுக்கப்பட்டிருந்தது.<br><br>அதேநேரம், தற்போது கம்பனி ஏ321 என்ஈஓ மற்றும் / அல்லது ஏ330 என்ஈஓஎஸ் இனை மாற்றீடு செய்வதற்கு 2020 மற்றும் 2021 இல் விநியோகிக்கப்பட வேண்டிக் காணப்படுகின்ற நான்கு (04) எண்ணிக்கையான ஏ350-900 விமானங்களின் கொள்வனவு உடன்படிக்கையினை திருத்தஞ் செய்வதற்கு எயாபஸ் எஸ்ஏஎஸ் கம்பனியுடன் கம்பனி பேச்சு வார்த்தையில் காணப்படுகின்றதுடன் அறிக்கை திகதியில் உள்ளவாறு ரூபா 2,528.12 மில்லியன் (ஐ.அ.டொலர் 19.21 மில்லியன்) தொகையை முன்விநியோக செலுத்துகையாக எயாபஸ் இற்கு செலுத்தப்பட்டிருந்தது.<br>எவ்வாறாயினும், இந்த அறிக்கைத் திகதி வரை இது தொடர்பில் இந்தத் தீர்மானம் எடுக்கப்பட்டிருக்கவில்லை.<br><br>மேலும், 2016/2017 ஆம் ஆண்டில் விநியோகிக்கப்பட வேண்டுமென பட்டியல்படுத்தப்பட்டிருந்த, குத்தகையின் அடிப்படையில் நான்கு (04) ஏ350-900 விமானங்களினைப் பெற்றுக் கொள்வதற்கான குத்தகை உடன்படிக்கையினை இரத்துச் செய்தல் செயன்முறையில் இழப்பீடாக 2016/2017 ஆம் ஆண்டில் ரூபா 16,924.36 மில்லியன் தொகையொன்று செலுத்தப்பட்டிருந்தது. | எயார்பஸ் எஸ்ஈ இன் முன்னைய நிறைவேற்றுனரின் மனைவியால் உரிமையாக்கபட்ட கம்பனிக்கு கொடுப்பனவுகளை மேற்கொள்வதற்கு இணங்கியிருந்தார். ஆறு (6) ஏ330-300 மற்றும் ஏ 350 – 900 இன் நான்கு(4) ஏயார்பஸ் கிறாப்ட் மற்றும் எஸ்எல்ஏ ஆல் நான்கு (4) ஏ350-900 குத்தகை அடிப்படையில் கொள்வனவில் செல்வாக்குச் செலுத்துவதற்கு கிடைக்கப்பெற்ற சட்டஅறிவுரையினை அடிப்படையாகக்கொண்டு ஏ350-900 கொள்வனவு உடன்படிக்கையினை மீட்பதற்குரிய தேவைப்பாடுகளை உள்ளடக்கிய அதன் கோரிக்கைகளையும் நட்டத்தொகைகளுடன் செலுத்திய பீடிபீகளை அறவிடுவதற்கும் எஸ்எல்ஏ எயார்பஸ் எஸ்எல்ஏகளிற்கு அறிவித்திருநதார். | வலயமைப்பில் செயற்படுத்தக்கூடிய விமானங்களின் கலவையினை கம்பனி கவனமாகத் தீர்மானிக்க வேண்டும் என்பதுடன் கம்பனியானது எதிர்காலத்தில் சிககனமற்ற கொடுக்கல்வாங்கல்களை தவிர்ப்பதற்கு முறையான கிரயநலன் பகுப்பாய்விற்குப்பின்னர் கொள்வனவுசெய்யப்பட வேண்டிய எயார்கிராப்ட் இன் கலவையினை கம்பனி தீர்மானிக்க வேண்டும். |

### 1.5.4 நிறுவனத்தின் தொடர்ந்தியங்கும் தன்மை

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| கணக்காய்வு விடயம் | முகாமைத்துவ கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| (அ) கம்பனியின் கடன்படு நிலைமையினை அதிகரித்து, 2017/2018 ஆண்டின் போது அரச வங்கிகளிடமிருந்து | கம்பனி மூலதனமாக்கலின் கீழ் காணப்படுகின்றதுடன் 2020 – 2022 ஆம் ஆண்டு | வியாபாரத்தினை சிக்கனமானதாக மற்றும் இலாபத்தன்மை வாய்ந்த முறையில் நடாத்திச் செல்லுதல் மற்றும் |

| | | | |
|---|---|---|---|
| | ஐ.அ.டொலர் 200 மில்லியன் வங்கி கடன் வசதிகள் (அண்ணளவாக ரூபா 37,960 மில்லியனுக்குச் சமமானது) மற்றும் ரூபா 26,250 மில்லியன் ரூபா கடன்கள் பெறப்பட்டிருந்தது. மீளாய்வாண்டின்போது யூஎஸ்டி 14.63 மில்லியன் வட்டி (ரூபா 2,776.77 மில்லியனிற்கு அண்ணளவாக) யூஎஸ்டி 200 கடன்களிற்காக செலுத்தப்பட்டிருந்தது. எந்தவொரு மூலதன கொடுப்பனவுகளும் இத்திகதிவரை மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. | காலப்பகுதியின் போது யூஎஸ்டி 500 மில்லியன் வரை மீள்மூலதனமாக்குவதற்கு திறைசேரியானது அமைச்சரவை அங்கீகாரத்தை பெற்றிருந்தது. எல்கேஆர் முறிகளில் யூஎஸ்டி 150 மில்லியன் முதல் கட்டம் 2020 நவம்பர் 18 இல் பெறப்பட்டது. இரண்டு அரச வங்கிகளிடமிருந்து பெறப்பட்ட வசதிகளின் மீள்கொடுப்பனவு கம்பனியின் ஒட்டுமொத்த மீள்கட்டமைப்பின் பகுதியொன்றாக உருவாக்கப்படுமென்பதுடன் செயற்பாடுகள் மீதான கொவிட் - 19 இன் பாரிய விளைவினால் மீள்கொடுப்பனவு நிறுவனமொன்று மீட்சியடையும் வரை அல்லது அவற்றை மீள்நிதியீட்டும் வரை தாமதமாக்கப்பட வேண்டும். | கம்பனியின் கடன்படு நிலைமையினை இழிவளவாக்குதல் போன்றவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்புடையதாகக் காணப்படுகின்றது. |
| (ஆ) | கம்பனியின் சாதகமற்ற நிதிநிலைமை காரணத்தால் அரச உத்தரவாதத்தின் கீழ் 2019 யூன் இல் முதிர்ச்சியடைகின்ற முறியினை தீர்ப்பனவு செய்வதற்கு ஆண்டிற்கு 7 சதவீத வட்டி விகிதத்துடன் ஐ.அ.டொலர் 175 மில்லியன் (அண்ணளவாக ரூபா 33,215 மில்லியன்) பெறுமதிக்கு ஐந்து வருட சர்வதேச முறிகளினை 2019 யூன் இல் கம்பனி மீள்வழங்கியிருந்தது. | முறியின் மீள்கொடுப்பனவு 2024 யூன் இல் மேற்கொள்ளப்படுவதுடன் எஸ்எல்ஏ இன் ஒட்டுமொத்த மீள்கட்டமைப்பு இதனை முன்வைக்கும். | வியாபாரத்தினை சிக்கனமானதாக மற்றும் இலாபத்தன்மை வாய்ந்த முறையில் நடாத்திச் செல்லுதல் மற்றும் கம்பனியின் கடன்படு நிலைமையினை இழிவளவாக்குதல் போன்றவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்புடையதாகக் காணப்படுகின்றது. |

### 1.6 பெறவேண்டிய மற்றும் செலுத்த வேண்டிய கணக்குகள்

#### 1.6.1 பெறவேண்டியவைகள்

| கணக்காய்வு விடயம் | முகாமைத்துவ கருத்துரை | பரிந்துரை |
| --- | --- | --- |
| ரூபா 35,276,585 தொகையான வற் மீள்நிதி, வற் கட்டுப்பாட்டு இணக்க கணக்கில் 8 வருடங்களுக்கும் அதிகமாக நிலுவையாகக் காணப்பட்டது. | எஸ்எல்ஏ தொடர்ச்சியாக அதனை பின்பற்றுவதுடன் சில கூட்டங்கள் ஐஆர்டி இன் அலுவலர்களுடன் இடம்பெற்றது. இறுதிதொடர்பாடலானது 2020 நவம்பர் 17 இல் மேற்கொள்ளப்பட்டிருந்தது. எனினும், ஐஆர்டி இன் வரையறுக்கப்பட்ட தொழிற்பாடுகளால் செய்முறைகள் தாமதப்படுத்தப்பட்டதுடன் பூர்த்தியாக்கலிற்காக அலுவலர்களினை எதிர்கொள்ளமுடியாதிருந்நது. | பெறவேண்டிய வற் இனை அறவிடுவதற்கு தேவையான நடவடிக்கையினை கம்பனி எடுக்க வேண்டும். அதேவேளை, மீள்நிதியினை அறவிடுவில் ஏதேனும் சந்தேகம் காணப்படுமாக இருந்தால் ஏற்பாடுகள் மேற்கொள்ளப்படல் வேண்டும். |

### 1.7 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடன் இணங்காமை

| சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடனான தொடர்பு | | இணங்காமை | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
| --- | --- | --- | --- | --- |
| நல்லாளுகைக்கான பொது முயற்சிகள் வழிகாட்டல் தொடர்பான 2003 யூன் 02 ஆந் திகதிய பிஈடீ/12 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கை | | | | |
| (i) | 5.1.3 ஆம் பிரிவு | நாளதுவரையாக்கப்பட்ட வருடாந்தப் பாதீட்டுடன் கூடிய சபையினால் அங்கீகரிக்கப்பட்ட கூட்டிணைந்த திட்டத்தின் நாளதுவரையாக்கப்பட்ட பிரதிகள், நிதியாண்டு ஆரம்பிப்பதற்கு முன்னர் ஆகக்குறைந்தது | எவ்வாறாயினும், 2019 ஏப்ரல் 21 இன் நிகழ்வுகள் எயார்லைன் இன் மீது குறிப்பிடத்தக்க தாக்கமொன்றினைக் கொண்டிருந்தது. வியாபாரத் திட்டம் மீளமைக்கப்பட்டது. மீளமைக்கப்பட்ட வியாபாரத் திட்டம் சபையினால் 2019 யூன் 25 இல் சபையால் அங்கீகரிக்கப்பட்டு 2019 யூலை 01 இல் திறைசேரி அனுமதிக்காக வரிசை | கூட்டிணைந்த திட்டம் மற்றும் வருடாந்தப் பாதீடு என்பவற்றிற்கு வரிசை அமைச்சு, பொது முயற்சிகள் திணைக்களம், பொதுத் திறை சேரியிடமிருந்து அங்கீகாரத்தினைப் பெற்றுக் கொள்வதற்கு மற்றும் நிதியாண்டு ஆரம்பிப்பதற்கு முன்னர் ஆகக்குறைந்தது 15 நாட்களுக்கு முன்னர் |

| | | | | |
|---|---|---|---|---|
| | | 15 நாட்களுக்கு முன்னர் வரிசை அமைச்சு, பொது முயற்சிகள் திணைக்களம், பொதுத் திறைசேரி, கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு அனுப்பப் பட்டிருக்கவில்லை. | அமைச்சிற்கு சமர்ப்பிக்கப்பட்டது. | கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு அனுப்புவதற்கு நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். |
| (ii) | 9.3.1(i) ஆம் பிரிவு | கம்பனியின் ஆட்சேர்ப்புக்கள் மற்றும் பதவியுயர்வுகள் திட்டம் (எஸ்ஓஆர்) பொதுத் திறைசேரியின் இணக்கப்பாட்டுடன் சம்பந்தப்பட்ட அமைச்சினால் அங்கீகரிக்கப் பட்டிருக்கவில்லை. | அமைச்சிடமிருந்தான அனுமதியுடன் 2019 ஆகஸ்ட் 23 இல் அமைச்சிற்கு அனுப்பப்பட்டிருந்தது. | கம்பனியின் எஸ்ஓஆர் இற்காக, பொதுத் திறைசேரியின் இணக்கப்பாடு மற்றும் அமைச்சின் அங்கீகாரம் பெறப்படல் வேண்டும். |

## 2. நிதிசார் மீளாய்வு

### 2.1 நிதிசார் விளைவு

குழுவின் செயற்பாட்டு விளைவு ரூபா 44,139.40 மில்லியன் தொகையான நட்டமொன்றாகக் காணப்பட்டதுடன் மீளாயவாண்டிற்காக ரூபா 47,197.86 மில்லியன் நட்டமொன்று ஏற்பட்டதுடன் தொடர்புடைய முன்னைய ஆண்டில் குழுவின் நட்டம் 41,700.33 மில்லியன் தொகையாகவும் கம்பனியின் நட்டம் ரூபா 44,022.67 மில்லியன் தொகையாகும். ஆகையினால், நிதி விளைவில் ரூபா 2,439.07 மில்லியன் மற்றும் ரூபா 3,175.19 மில்லியன் தொகையான பற்றாக்குறையொன்று முறையே குழு மற்றும் கம்பனியில் அவதானிக்கப்பட்டது. ரூபா 2,704.29 மில்லியனிற்கு நாணயமாற்று நட்டம் அதிகரித்தமை மற்றும் நிதியிடல் நடவடிக்கைக்காக எஸ்எல்எவ்ஆர்எஸ் 16 இனை முதல்தடவை பயன்படுத்துவதன் விளைவால் மீளாய்வாணடின் போது ரூபா 23,349.47 மில்லியனிற்கு அதிகரித்தமை போன்றன பின்னடைவைக்கான பிரதான காரணங்களாகவிருந்தன.

### 2.2 பிரதான வருமானம் மற்றும் செலவின வகைகளின் போக்கு பகுப்பாய்வு

| | 2019/20 | 2018/19 | முன்னேற்றம்/ பற்றாக்குறை | |
|---|---|---|---|---|
| | ரூபா. மில்லியன் | ரூபா. மில்லியன் | ரூபா. மில்லியன் | சதவீதம் (%) |
| வருமானம் | | | | |
| - பயணிகள், சரக்கு, மிகைப் பொதிகள் மற்றும் அஞ்சல் | 164,743.85 | 164,928.74 | (184.89) | (0.11) |
| - விமான முடியுமிடம், தீர்வை அற்ற பட்டியல்படுத்தப்படாத சேவைகள் மற்றும் விமானம் | 15,407.17 | 15,411.58 | (4.41) | (0.03) |

| | | | | |
|---|---|---|---|---|
| - ஏனைய வருமானம் மற்றும் மிகைகள் | 3,046.13 | 4,222.74 | (1,176.61) | (27.86) |
| செலவினம் | **(அதிகரிப்பு / குறைவு)** | | | |
| - விமான எரிபொருள் கிரயம் | 55,327.75 | 60,672.78 | 5,345.03 | 8.80 |
| - விமான பராமரிப்பு மற்றும் மேந்தலைக் கிரயம் | 22,820.26 | 26,333.09 | 3,512.83 | 13.34 |
| - பெறுமானத்தேய்வு / நட்டக்கழிவு | 1,214.05 | 1,349.28 | 135.23 | 10.02 |
| - விற்பனை சந்தைப்படுத்தல் மற்றும் விளம்பரப்படுத்தல் செலவினங்கள் | 14,540.51 | 15,775.49 | 1,234.98 | 7.83 |
| - நாணயமாற்று நட்டம் | 6,118.51 | 3,414.22 | (2,704.29) | (79.21) |
| - தேறிய நிதிக்கிரயம் | 22,276.24 | 10,850.11 | (11,426.13) | (105.31) |

(அ) எஸ்எல்எவ்ஆர்எஸ் 16 இனை பின்பற்றுதலுடன் குத்தகைப் பொறுப்புக்கள் மீதான நிதிக்கட்டணங்கள் மற்றும் நாணயமாற்று நட்டத்தால் முன்னைய ஆண்டுடன் ஒப்பிடும் போது மீளாய்வாண்டில் நாணயமாற்று நட்டம் மற்றும் தேறிய நிதிக்கிரயம் முறையே ரூபா 2,704.29 மில்லியன் மற்றும் ரூபா 11,426.13 மில்லியனால் முறையே 79.21 மற்றும் 105.31 சதவீதமாக அதிகரித்திருந்தது.

(ஆ) முன்னைய ஆண்டுடன் ஒப்பிடும்போது நிதிக்கிரயம் மற்றும் நாணயமாற்று நட்டம் தவிர்ந்த ஏனைய செலவீனங்கள் முன்னைய ஆண்டுடன் ஒப்பிடும்போது 8 சதவீதத்திலிருந்து 13 சதவீதத்திற்கு குறைந்தது.

(இ) இலங்கை ஹற்றரிங்கால் பங்குலாபம் 48 சதவீதத்தால் குறைவடைந்தமையால் ஏனைய வருமானம் மற்றும் மிகைகள் 28 சதவீதத்தால் குறைவடைந்தது.

### 2.3 விகிதப் பகுப்பாய்வு

| | 2019/20 | 2018/19 | 2017/18 | 2016/17 | 2015/16 |
|---|---|---|---|---|---|
| நடைமுறைப் பொறுப்புக்களிற்கான நடைமுறைச் சொத்துக்கள் (தடவைகளின் எண்ணிக்கை) | 0.13 | 0.18 | 0.23 | 0.21 | 0.27 |
| வருமானத்திற்கான தேறிய நட்டத்தின் சதவீதம் | 26 | 24 | 11 | 21 | 10 |
| வருமானத்தில் அதிகரிப்பு / (குறைவு) சதவீதம் | 0.1 | 11.7 | 19.3 | 4.6 | (02) |
| ஒட்டுமொத்த வருமானம் (தொன் கிலோமீற்றர் வருமானத்திற்கான தேறிய போக்குவரத்து வருமானம்) (ரூபா.) | 99.03 | 91.32 | 84.24 | 80.08 | 79.06 |
| அலகுக் கிரயம் (ரூபா.) | 74.22 | 74.31 | 65.74 | 61.61 | 58.72 |
| இலாப நட்டமற்ற ஏற்றும் காரணி (%) | 74.95 | 81.37 | 78.04 | 76.94 | 74.27 |
| வருமான பிரயாணிகளின் கிலோமீற்றர் ஒன்றிற்கான வருமானம் (ரூபா.) | 10.15 | 9.43 | 8.62 | 8.43 | 8.17 |

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) 2015/2016 ஆம் ஆண்டில் கம்பனியின் நடைமுறைப் பொறுப்புக்களுக்கான நடைமுறைச் சொத்துக்கள் விகிதம் 0.27 ஆகவிருந்ததுடன் இது மீளாய்வாண்டில் தொடர்ச்சியாக 0.13 இற்கு குறைவடைந்தது. ஆகையினால், அது கம்பனியின் பலவீனமான தொழிற்படு மூலதன நிலையினைக் காட்டுகின்றது.

(ஆ) வருமானத்திற்கான தேறிய நட்டச் சதவீதம் முன்னைய ஆண்டில் 13 சதவீதத்தினால் அதிகரித்திருந்தது. எவ்வாறாயினும், அது 02 சதவீதத்தினால் மீளாய்வாண்டில் அதிகரித்திருந்தது.

(இ) 2015/16 ஆம் ஆண்டிலிருந்து ஒட்டுமொத்த வருமானம் தொடர்ச்சியாக அதிகரித்திருந்ததுடன், அது 7.71 இனால் மீளாய்வாண்டில்கூட அதிகரித்திருந்தது. (தொன் கிலோ மீற்றர் வருமானத்திற்கான தேறிய போக்குவரத்து வருமானம் - ரூபா.)

(ஈ) 2016/17 ஆம் ஆண்டிலிருந்து 2018/2019 வரையிலும் அலகுக் கிரயம் தொடர்ச்சியாக அதிகரித்திருந்ததுடன் எனினும், மீளாய்வாண்டில் 74.31 சதவீதத்திலிருந்து 74.22 சதவீதத்திற்கு 0.09 சதவீதத்தால் குறைவடைந்திருந்தது.

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 செயற்பாட்டு வினைத்திறனின்மைகள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| கணக்காய்வு விடயம் | முகாமைத்துவ கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| கணிப்பீடு, சம்பளத்திற்குரிய தகவல்களை வழங்கல், செயற்திறனான கொடுப்பனவு தொடர்பில் கொடுப்பனவிற்கு மனித மாற்றங்களை வழங்கல் போன்ற அவர்களுடைய கடமைகளை நிதி அமைச்சர் தானாக மேற்கொண்டார். ஆகையால், செயறதிறனான கொடுப்பனவானது அவர்மீது தனியாக தங்கியிருந்தது. | இந்த விடயமானது முக்கிய பங்குதாரர்களால் ஏற்கனவே இனங்காணப்பட்டிருந்ததுடன் அது ஆர்எவ்பீ ஆல் ஆவணப்படுத்தப்பட்டது.<br><br>2021 நடுப்பகுதியில் அமுல்படுத்துவதற்கு திட்டமிடப்பட்டது. | கணிப்பீட்டிற்காக வேண்டப்பட்ட விமான தாமதங்கள் மற்றும் விமான சுழற்சிமாற்றங்கள் போன்றவற்றை உள்ளடக்கிய செயன்முறையை தன்னியாக்கஞ்செய்வதற்கு முகாமைத்துவம் நடவடிக்கை எடுக்க வேண்டும். |

## 3.2 மனிதவள முகாமைத்துவம்

| கணக்காய்வு விடயம் | முகாமைத்துவ கருத்துரை | பரிந்துரை |
| --- | --- | --- |
| கம்பனி 05 கூட்டு உடன்படிக்கைகளினை அமுல்படுத்துவதற்கு இணங்கியிருந்ததுடன் 2014 யூன் 01 இலிருந்து அமுலுக்கு வரும் வகையில் 2014 யூன் 01 தொடக்கம் 2017 மே 31 வரையான காலப்பகுதிக்காக 2014 செப்தெம்பர் 12 இல் 05 சங்கங்களுடன் உடன்படிக்கைகளினை ஏற்படுத்திக் கொண்டது. எவ்வாறாயினும், மேற்குறித்த உடன்படிக்கைகளுக்கான சபை அங்கீகாரம் ஒரு வருடம் கழிந்த பின்னர் 2015 செப்தெம்பர் 21 இல் பெறப்பட்டிருந்தது. அந்த உடன்படிக்கைகளின் செல்லுபடிக் காலம் 2017 மே 31 இல் காலாவதியாகியிருந்த போதிலும், அவற்றை 2020 நவம்பர் வரையிலும் புதுப்பிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. மேலும், அந்த உடன்படிக்கைகளுக்கு அமைச்சின் அங்கீகாரத்துடன் திறைசேரியின் இணக்கப்பாடு 2020 நவம்பர் 20 வரையிலும் பெறப்பட்டிருக்கவில்லை. | தற்போதைய நிலைமைக்குப் பின்னரான சூழ்நிலைகள் வணிகத்தை மாற்றியது. ஓட்டுமொத்த உடன்படிக்கையிலிருந்து (சீஏ) உருவாகின்ற தற்போதில்லா உற்பத்தியல்லாக்கிரயம் 2020 ஏப்ரலிருந்து அமுல்படுத்தப்பட்ட கிரய சேமிப்பு நடவடிக்கைகளுடன் இடைநிறுத்தப்பட்டிருந்தது. புதிய கூட்டு உடன்படிக்கைகளில் ஈடுபடுதலின் தொடர்ச்சியானது சிபாரிசு செய்யப்பட்டிருக்காததுடன் முகாமைத்துவமானது சீஏக்களின் மீளபுதுப்பிக்காமைக்கான வேலையில்லா முகாமைத்துவமானது நிதி அமைச்சிடமிருந்தான கட்டளையானது சீஏக்களின் நிராகரிப்பு தொடர்பில் 2019 முன்னைய காலத்தில் கண்டுபிடிக்கப்பட்டது. எனினும், முறையான வழிகாட்டல் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. ஸ்ரீ லங்கன் எயார்லைன்ஸ் இன் இயக்குனர் சபையானது சீஏக்களை முன்அனுப்பலிற்காக தந்திரோபாயத்தை மீளாய்வு செய்ததுடன் நிறுவனத்தின் நிறுவனரீதியான ஒற்றுமையை பேணும் அதேநேரம் சீஏக்களுடன் இணைந்த சவால்களை எதிர்கொள்வதற்கு உரிய செய்முறையை பின்பற்றுவதற்கு சபையால் 2020 நவம்பர் 29 இல் அனுமதி வழங்கப்பட்டிருந்தது. | நிறுவனத்தின் தொழில் கூட்டிணை பேணுவதற்கு முகாமைத்துவம் நடவடிக்கை எடுக்க வேண்டும். |

## 4. கணக்கணிப்பொறுப்பும் நல்லாளுகையும்

### 4.1 கூட்டிணைந்த திட்டம்

| கணக்காய்வு விடயம் | முகாமைத்துவ கருத்துரை | பரிந்துரை |
| --- | --- | --- |
| 2003 யூன் 2 ஆந் திகதிய | பண்டமிக் இன் விளைவால் | கூட்டிணைந்த திட்டம் |

| | | |
|---|---|---|
| பிஈடீ/12 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கையின் 5.1.1 ஆம் பந்தியின் பிரகாரம், கூட்டிணைந்த திட்டம் வருடாந்தம் மீளாய்வு செய்யப்பட்டு சுழற்சி திட்டமொன்றாக தொடரப்பட்டிருக்கவில்லை. | புதிய வணிக சூழ்நிலையை கருத்திற்கொள்வதன் மூலம் நாளதுவரையாக்கப்பட்ட ஐந்து வருட திட்டமானது தயாரிக்கப்பட்டிருந்தமையால் இது 2021 ஆரம்பத்தில் சமர்ப்பிக்கப்படும். | வருடாந்தம் முகாமைத்துவத்தால் மீளாய்வு செய்யப்பட்டு சுழற்சித் திட்டமொன்றாக தொடரப்படல் வேண்டும். |

### 4.2 வருடாந்த செயல்நடவடிக்கைத்திட்டம்

| கணக்காய்வு விடயம் | முகாமைத்துவ கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| பீஈடி/12 ஆம் இலக்க நல்லாளுகைக்கான பொது முயற்சிகள் வழிகாட்டிகள் தொடர்பான கையேட்டின் 5.1.2 ஆம் பந்தியின் பிரகாரம் திட்டகாலப்பகுதியின் போது அடையப்பட வேண்டிய இலக்குகள் மற்றும் எல்லைகளுடன் முகாமைத்துவப் பொறுப்புக்களை இனங்கண்டு தெளிவாக செயல்நடவடிக்கைத்திட்டத்தை கம்பனி தயாரித்திருக்கவில்லை. | இது 2019 திசெம்பர் இல் அமைச்சிற்கு அனுப்பப்பட்டது. | முகாமைத்துவமானது வருடாந்த செயல்நடவடிக்கைத்திட்டத்தை தயாரிக்க வேண்டியதுடன் இதன் செய்முறையானது கம்பனியின் செயலாற்றல் மீதான சிறந்த கட்டுப்பாட்டிற்காக மீளாய்வு செய்யப்பட வேண்டும். |

### 4.3 நிலைபேறான அபிவிருத்தி இலக்குகள்

| கணக்காய்வு விடயம் | முகாமைத்துவ கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 2030 ஆம் ஆண்டிற்கான ஐக்கிய நாடுகளின் நிலைபேறான அபிவிருத்தி நிகழ்ச்சி நிரலினைப் பற்றி அறிந்திருப்பதற்கு ஸ்ரீலங்கன் எயார்லைன்ஸ் லிமிட்டட் தவறியிருந்தமை காரணமாக, அதன் செயற்பாடுகளுடன் தொடர்புடைய நிலைபேறான அபிவிருத்தி இலக்குகள் மற்றும் குறிக்கோள்களினை இனங்காண்பதற்கு அத்துடன் அந்த இலக்குகளினை அடைந்து கொள்வது தொடர்பில் மைல்கற்களுடன் அவ்வாறான இலக்குகளினை அடைந்து கொள்வதனை மதிப்பிடுவதற்கான குறிகாட்டிகளினை இனங்காண்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | இலங்கை எஸ்டீஜிஎஸ் அடைவுகளினை நோக்கியதாக செயல்முன்னேற்றத்தினை துரிதப்படுத்துவதற்கான தேவையினை இனங்கண்டிருந்ததுடன் பல ஆண்டுகளாக பல்வேறு பயனுள்ள செயற்திட்டங்களினை நிறைவேற்றுவதன் மூலம் அதன் அர்ப்பணிப்பு மற்றும் ஆதரவினை நிரூபித்துள்ளது. நற்சுகாதாரம் மற்றும் நல்வாழ்க்கை, தரமான கல்வி மற்றும் சுத்தமான நீர் மற்றும் தூய்மை தொடர்பில் இலங்கையர் பாரியதொரு எண்ணிக்கையான செயற்திட்டங்களினை நடாத்துகின்றதுடன் இது நாளதுவரையாக்கப்பட்ட வணிகத்திட்டத்துடன் ஒன்றிணைக்கப்பட்டுள்ளது. | நிலைபேறான அபிவிருத்தி இலக்குகள் மற்றும் குறிக்கோள்கள் தொடர்புடைய அமைச்சின் இணக்கப்பாட்டுடன் முகாமைத்துவம் இனங்காணப்பட வேண்டியதுடன் அவைகள் நிறுவன அடிப்படையில் அன்றி தேசிய அடிப்படையில் மதிப்பிடப்பட வேண்டும். |